# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.12.19

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 15/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**28/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையை ஏற்புடைத்தாக்குதல்.**

"இலங்கையை, ஆசியாவின் புத்தூக்க பொருளாதாரமாக மேலோங்கச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" எனும் தலைப்பிலான 2014.12.16 ஆம் திகதிய 28/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தை 2015.01.01 ஆம் திகதி தங்களது அலுவலக வளவில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவாய் வேண்டிக்கொள்கின்றேன்.

தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக 28/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**
தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்

8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள்,உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் /உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்விநிறுவகங்கள் /வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் /உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்விநிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/10/1/1

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 28/2014

எனது இல : EST-1/MISCL/06/0032(I)
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.12.16

அமைச்சு செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்டச் சபை தலைவர்கள் அனைவருக்கும்

**இலங்கையை, ஆசியாவின் புத்தூக்க பொருளாதாரமாக மேலோங்கச் செய்வதற்காக**
**அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்**

"எதிர்கால சந்ததியினருக்காக தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதோடு, சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அர்ப்பணிப்புடன பங்காற்றுவோம்" எனும் தலைப்பில் 2013.12.23 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 35/2013 மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. இலங்கையை, ஆசியாவின் புத்தூக்க பொருளாதாரமாக மேலோங்கச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவது குறித்த மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை சகல அரசாங்க அலுவலர்களிடமும் ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்துவதோடு, 2015 சனவரி மாதம் 01 ஆந் திகதியான வியாழக்கிழமை சகல அரசாங்க அலுவலர்களினதும் ஒத்துழைப்புடன் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

03. அதன் பிரதான உத்தியோகபூர்வ வைபமானது சனாதிபதி அவர்களின் செயலாளரின் தலைமையில் சனாதிபதி செயலக வளாகத்தில் அன்றைய தினம் மு. ப. 9.00 மணியளவில் நடாத்தப்படும். இந்தப் பிரதான வைபவத்திற்கு நேரொத்ததாக அன்றைய தினம் அதே நேரத்தில் இந் நிழ்ச்சித் திட்டத்தை தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களிலும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனவே, இது குறித்து கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமானது அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

I. சகல பணியாட் தொகுதியினரனதும் முன்னிலையில் நிறுவனத்தின் அல்லது அலுவலகத்தின் தலைவர் தேசியக் கொடியினை ஏற்றுதல் (பணியாட் தொகுதியினரின் சகல உறுப்பினர்களும் ஓர் இடத்தில் ஒன்றுகூடுவதற்கு இடவசதிகள் போதாதவிடத்து அனைத்து உறுப்பினர்களும் பங்குபற்ற கூடியவாறு பொருத்தமான மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்).

II. தேசியக் கொடியினை ஏற்றியதன் பின்பு தேசிய கீதத்தினைப் பாடுதல்.

III. படை வீரர்கள் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சகலரையும் நினைவுகூர்வதற்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துதல்.

IV. சகல பணித்தொகுதியினரும் தமக்கு இலகுவான மொழியில் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலர்களின் சத்தியம் / உறுதிமொழியினை உரத்து வாசித்தல்.

V. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி அம்சமாக இலங்கையை, ஆசியாவின் புத்தூக்க பொருளாதாரமாக மேலோங்கச் செய்வதற்கான பணியில் பணியாட் தொகுதியினரில் ஒவ்வொருவரினதும் பங்களிப்பினை வழங்க வேண்டியதன் தேவை எனும் தலைப்பில் சுருக்கமான உரையொன்றினை வழங்குதல்.

04. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமானதாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தயவுடன் தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

பிரதிகள் : கௌரவ மாகாண ஆளுநர்கள்

# அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் / உறுதி மொழி

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியாகிய இன்றைய தினம்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக மாற்றியமைக்கும்

புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தில் காலடிவைக்கிறோம்.

இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள்

ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்

ஐக்கியமாகவும், ஒரே மனப்பாங்மையுடனும் மலர்ச்சியடைகின்ற தாய் நாட்டை

அபிவிருத்தி செய்யும் பாரிய சவாலை வெற்றி கொள்வதற்காக

இலங்கையை, ஆசியாவின் புத்தூக்க பொருளாதாரமாக

மேலோங்கச் செய்வதற்கான பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக

பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியரான நான்,

அரசாங்க கொள்கைகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு

என்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைப் பொறுப்புக்களை

வினைத்திறமையாகவும்,

பயன்மிக்கதாகவும்,

திடசங்கற்பத்துடனும்,

உயரிய அர்ப்பணிப்புடனும்,

நேர்மையாகவும்,

மக்களுக்கு பக்கச்சார்பாகவும்,

நிறைவேற்றுவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்கின்றேன் / உறுதிமொழிகின்றேன்.